2.11.2023 ரமேஷ் (எ) காசி ம.சா.1 (பக்கம் 2 )

எச்.எம்.ஒ.பி.338/2019

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை =

விவாகரத்து கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். காஞ்சிபுரம் ஜவுளி வியாபாரிகள் சங்கத்தில் வைத்து எங்கள் திருமணம் நடைபெற்றது. 4.9,.2009 அன்று எங்களுக்கு திருமணம் நடைபெற்றது. எங்கள் திருமணம் பெற்றோர்களால் நிச்சியிக்கப்பட்ட திருமணம் ஆகும். எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன்பு என்னுடைய உறவினர் அல்ல. நான் திருமணத்தின் போது பட்டு சாய பட்டறையில் வேலை பார்த்து வந்தேன். தற்போதும் அதே வேலையை தான் செய்து வருகிறேன். உறவினர்கள் மூலமாக தான் எதிர்மனுதாரரை பெண் பார்த்து திருமணம் செய்தேன். நான் 8ம் வகுப்பு படித்துள்ளேன். என் மனைவியும் 8ம் வகுப்பு படித்துள்ளார். நான் மாதம் வருமானமாக ரூ்.6 ஆயிரம் ஈட்டி வருகிறேன். ரூ.6 ஆயிரம் தான் மாதம் வருமானம் காட்ட எதாவது ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தொழில்' ஸதாபனம் சங்கு சா பேட்டையில் பி.என். மணி ஷா சில்க் டையிங் என்ற பெயரில் இயக்கிவருகிறேன். திருமணத்திற்கு முன்பு இருவீட்டார் சம்மத்தின் பேரில் நிச்சியதார்த்தம் நடைபெற்றது. நிச்சயதார்த்ததிற்கும் திருமணத்திற்கும் இடையே எவ்வளவு நாட்கள் இடைவெளி இருந்தது என்று தற்போது நினைவில்லை. நிச்சியதார்த்தத்திற்கு பின்னிட்டு நான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்று வந்த நல்ல முறையில் தான் எங்கள் உறவு இருந்த வந்தது.

(மேலும் எதிர்மனுதாரர் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)